சுகாதார
விழிப்புணர்ச்சி

மலேசிய சுகாதார
அமைச்சின்

# SARS

# கடுமையான சுவாசப் பிரச்சினை நோய் அறிகுறி

1. கடுமையான சுவாசப் பிரச்சினை அறிகுறி என்பது என்ன ?

கடந்த பிப்ரவரி 2003 முதல் சீனாவின் குவாங் டொங், ஹாங் காங் மற்றும் வியட்நாமில் நிமோனியா எனும் கடுமையான காய்ச்சல் பரவியிருப்பதை உலக சுகாதார நிறுவனம் (WHO) கண்டுப்பிடித்துள்ளது.

தொடர்ந்து மேலும் சில நாடுகளிலும் பரவியுள்ளது தெரிய வந்துள்ளது. இந்த நிமோனியா இப்பொழுது கடுமையான சுவாசப் பிரச்சினை அறிகுறி (SARS) என விளங்குகின்றது. இந்நோயின் அறிகுறிகளும் சளி - காய்ச்சல் போன்று இருக்கும் (38.5 செல்சியஸ் கடுமையான காய்ச்சல், தசை வலி, இருமல், தலைவலி மற்றும் தொண்டை வலி சேர்ந்தார் போல் வரும்). தொடர்ந்து மூச்சு விட சிரமும் (மூச்சுத் திணறல்) பின்னர் கடுமையான நிமோனியா அல்லது மரணத்திற்கு இட்டுச் செல்லும். பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்வதாலும் நோய் பீடிக்கப்பட்டவர்களுடன் பழகுவதாலும் இந்நோய் தொற்றும்.

2. SARS ஏற்படக் கூடிய காரணம் யாது ?

இதற்கான காரணம் இன்னும் அறியப்படவில்லை.

3. இது பரவக் கூடியதா? எவ்வாறு பரவுகிறது?

ஆமாம், இது பரவக் கூடியது. நெருங்கிப் பழகுவதால் ஏற்படுகிறது. உதாரணமாக நோயாளியை கவனித்துக் கொள்வதாலும் அவருடன் நெருங்கி இருப்பதாலும் நோயாளிகளின் சளியை தொடுவதாலும் ஏற்படும்.

4. தொற்றியப் பின் எவ்வளவு விரைவில் ஒருவர் நோய்வாய்ப்படுவார் ?

தற்சமயத்திற்கு, சரியான கால அளவு தெரியவில்லை. ஆனால், தற்பொழுது உள்ள தகவல்கள் அடிப்படையில் இது 2 வாரத்திற்குள் பீடிக்கும்.

5. பாதிக்கக் கூடியவர்கள் யார் ?

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சமீபத்தில் பயணம் சென்று வந்தவர்கள் அல்லது SARS நோய் கண்டவர்களோடு நெருக்கமாக பழகுபவர்கள் ஆகியோர்.

6. அதிக அளவு பாதிக்கப்பட்ட நாடுகள் யாவை?

உலக சுகாதார நிறுவனத் (WHO) தகவலின் அடிப்படையில், சீனாவின் குவாங் டொங் வட்டாரம், ஹாங் காங் மற்றும் வியட்நாமின் ஹானோய் ஆகும்.

சமீபத்தில் சிங்கப்பூர், கனடா மற்றும் தைவான் ஆகிய இடங்களில் இந்நோய் பரவியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

7. நம் நாட்டில் இந்நோய் தோன்றியுள்ளதா?

இங்கு இது வரை இந்நோய் தோன்றவில்லை.

8. எவ்வாறு SARS உறுதிப்படுத்தபடுகிறது?

நோயின் அறிகுறி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சமீபத்தில் பயணம் மேற்கொண்டிருந்தால் அல்லது SARS நோய் பீடிக்கப்பட்டவர்களுடன் நெருக்கமாக பழகுதல் போன்ற விவர அடிப்படையில் இந்நோய் உறுதிப்படுத்தப்படுகிறது.

9. இந்நோயை குணப்படுத்தமுடியுமா?

இந்நோயிக்கு இது வரை சிகிச்சை இல்லை. இருப்பினும் நீங்கள் சமீபத்தில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று வந்திருந்தால் மற்றும் உங்களுக்கு சளி - காய்ச்சல் போன்ற அறிகுறி ஏதும் இருப்பின் உங்கள் மருத்துவருடன் ஆலோசியுங்கள்.

10. என்னை பாதுகாத்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?

அவசியமான தேவையின்றி, நீங்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். நோய் பீடிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகுவதை தவிர்த்தல் நல்லது, நெருங்கிப் பழக வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சுகாதாரணமான முறைகளை பேண வேண்டும். கையுறை, கவச சாதனங்களை (MASK) உபயோகிக்க வேண்டும்.

11. SARS -க்கு தடுப்பூசி உள்ளதா?

இல்லை.

12. நான் சீனா, ஹாங்காங், வியட்நாம் மற்றும் பாதிக்கப்பட்ட இதர இடங்களுக்கு சுற்றுலா செல்ல முடியுமா?

அவசியமான தேவை ஏற்பட்டால் ஒழிய நீங்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும்.

Disease Control Division, Ministry of Health Malaysia,
Level 2, Block A, Health Offices Complex,
Jalan Cenderasari, 50590 Kuala Lumpur, Malaysia.
Tel : 03-2694 6394 Fax : 03-2694 4193